அருட் பெருஞ் ஜோதி.

# அருட்பிரகாசம்.

திங்கள் வெளியீடு

எனைத் தானும் நல்லவை கேட்க வினைத்தானு மான்ற பெருமை தரும்.

மலர். 1 | பிரபவ ஆண்டு ஆனி திங்கள். 11 நாள். | இதழ் 2

உள்ளுறை.


| | பக்கம். |
|---|---|
| மகிழ்ச்சிப்பெருக்கம் ... ... | 32 |
| பத்திரிகை ... ... | 34 |
| ஸ்ரீமத் வள்ளலார் பத்திரிகை ... | 35 |
| சமயம் ... ... | 37 |
| தமிழ் இலக்கியம் ... ... | 42 |
| நூல் வெளியீடு ... ... | 45 |
| ஜீவகாருணிய ஒழுக்கம் ... ... | 47 |
| அன்பு ... ... | 49 |
| உத்தரஞானசித்திபுரத்துசிற்சபை அமைப்பு | 58 |
| சமரச சன்மார்க்கம் ... ... | 52 |
| சுப்பிரமணிய விளக்கம் ... ... | 54 |
| தமிழ் ஆயுள்வேதம் ... ... | 58 |
| சத்தியஞான சங்கம் நிறைவு விழா ... | 60 |
| பாடசாலை கணக்கு ... ... | 63 |


வடலூர், தீ. கோ. வாதாசலன் அவர்களால்.

காரைக்கால் ஸ்ரீ வாணிவிலாச ஆரியந்திராசாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

வருட சந்தா ரூ 2.] 1927 [ஆயுட் சந்தா ரூ 25

# மகிழ்ச்சிப் பெருக்கம்.

நிகழும் பிரபவ ஆண்டு வைகாசித்திங்கள் 11-ஆம் நாள் (24-5-27) செவ்வாய்க்கிழமை காலை 6-மணிதொடங்கி இரவு 9 மணிவரையில் வடலூர் சத்தியதருமச்சாலையில் சத்திய ஞானசங் கத்தின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா யினிது முடிவு பெற்ற தென்பதைக் கேள்க்க அன்புமிக்கா ரனைவர்க்கும் ஓர் பெரு மகிழ்வை வினவிக்காமற் போகாதென்பது திண்ணம். அத்தி னத்தில் பல்காதனூரத்திலிருந்து ஆண் பெண் ணிருபாலார்களும் ஆங்கு உவந்து போக்து அக்காளே ஓர் கன்னுளாகக்கொண்டாடி னதும் யாவரும் போற்றத்தக்கதே அத்தருமச்சாலையின் கண் ணுற்றூர்கட்கு வெகு அருமை பெருமையுடன் மனங்கோணுது அன்னமிட்டு உபசரித்த அன்பாளர் ஸ்ரீமத் சுப்பராயசுவாமிக ளின் அறத்தொண்டு மிகவும் வியக்கத்தக்கதேயாம். கல்லாரி ணக்கமே துக்கநிவர்த்திக்குக் காரணமாமென கன்குணர்ந்தவரு மேலான நற்குண நற்செய்கை வாய்ந்தவருமான மீழ்வேளூர் திருவாளர் அருணாசலமுதலியாரவர்கள். தன்னலங் கருதாதவ ரும் பிறா துயர் காப்பவருமான காவேரிப்பாக்கம் திருவாளர் கோவிந்தராச முதலியார் அவர்கள் ஆகிய இருவர்களுடைய சொற்பொழிவுகள் பசுமரத்தாணிபோல் யாவர்களுடைய மன த்திலும் வன்றிப்பதியத் தகுவனவே. கல்வியறிவிலும் கற்பின் நிலைமையிலுந்தோற்றத்திலுஞ்சிறந்து விளங்கினமாதர்குழாங்கள் செவ்வனே ஆங்கிருந்து சொற்பொழிவாயின நீஞ்சுவை யமுதினை வெகு பொறுமையோடு அருந்தினதோடும், இன்னிசைப்பண்க ளோடு தோத்திரப்பாக்களே வெகு உருக்கத்தோடு பாடினதும், பிற்காலம் ஓர் நற்காலமாமெனக் காட்டும் ஓர் அறிகுறியாக விள ங்கின மேலும் "அருட்பிரகாசம்" என்ற மகுடந்தாங்கிய இப் பத்திரிகையின் மூதற்பிரதி பெற்றதும், அன்பர்களெல்லாஞ் சா தாரர்களாகச் சேரப்பெற்றதும், அறிவினது வளர்ச்சிக்கும் ஸ்ரீமத் அருட்பிரகாசப் பெருந்தகையாரின் திருவுளக்கருத்தின் மூடிவுக்கும் ஓர் அடிப்படையாக விளங்கிற்று. இவ்வைபவத்திற் கெல்லாம் வெகு பக்தி சிரத்தை யுடன் உடனிருந்து அன்புபா ராட்டித் தமக்குரிய கடமையில் வழுவாது உளற்றிய [illegible] ஸ்ரீ. உ. ப. பாலசுப்பிரமணிய சிவாசாரிய சுவாமி அவர்களின் கருத்

துக்கள் யாவருங்கொண்டாடத் தக்கனவேபாம். மேலும் இத்தகைய கண்ணில் புலவர் குழாங்கள் போதிய அளவுக்கு அவணுற்ற ஒருவருக்கொருவர் அளவிளா புண்ணிய சீலர்களின் சரித்தத்தைபுஞ் சன்மார்க்க நெறியின் சாதனங்களையும் அருட்பெருஞ்சோதி ஆண்டவனின் உண்மைத்தன்மையினையும், யாவரும் ஓதி உணர்ந்து பயிலுவதற்கான வழிகளைத் தெள்ளத் தெளிய ஆராய்ந்து ஆற்றலோடு நிலைப்படுமாறு ஓர் புதிய வுணர்ச்சி தூண்டச்செய்விப்பர்களேல், அஃதினுஞ் சிறந்ததோர் கன்மை நம் காட்டிற்கும் தற்காலத்திற்கு வேறில்லை யென்பதேயெமது துணிபாம். தற்காலம் ஓர் ஆண்டுவரை சத்திய தருமச்சாலையின்கடந் தேறிவருஞ்சமரச சன்மார்க்க பாடசாலையின் பெருக்கத்தை நினைந்து வெகு உருக்கத்துடன் "உதவிவரைத் தன்றுதவி யுதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்னுந்தமி ழாரணத்திற் கிணங்கத் தாங்களே வழிகாட்டிகளாக முன்னின்று உதவிபுரிந்தநாகூர் திருவாளர் டாக்டர் சாமிநாதசெட்டியாரவர்களும் நாகை. முருகேசம்பிள்ளை அவர்களும் ஏனைய அன்பர்களுங் கையிப்பப்பிட்டவாறே தங்களுடைய உதவிகளைத் தடைபடாமலீய்ந்து மூற்றப்பெறச் செயலிப்பார்களென்று நம்பியிருக்கின்றோம். கையொப்பத்தின் தொகை ரூ 153 என்பதையும் வரவுவந்த தொகை ரூ 5: என்பதையும் விபரமாகக் காட்டக்கூடியவண்ணம் இச்சஞ்சிகையின் ஒரு பக்கத்திற் சத்திய தருமச்சாலை நிலையத்தாரால் வெளியிடப்பட்டுள்ளதை அன்பர்கள் யாவருங்கண்டு உளர்வார்களாக. "என்றும் ஒன்றே செய்பவும் வேண்டும், ஒன்றும் இன்றே செய்யவும் வேண்டும், இன்றும் இன்னே செய்யவும் வேண்டும், காளை காளை யென்பீராகில் நம்முடை முறைகளாவது மறியீர். நமனுடை முறைகளாவது மறியீர் என ஆன்றோர் கூறிய வாக்கியத்திற் கிணங்க விரைவில் எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிவுபெறச்செய்தலே அன்பர்களின் இன்றியமையாத கடன்களி லேமன்றுமென்பதைத்தாங்களே வுய்த்துணர்ந்து நடத்தி வைப்பார்களாக. இத்துடன் சத்திய தருமச்சாலையின் வரவு செலவுகள் இவ்வாண்டின் நிறைவிழாவின்கண்ணே வாசித்துக்காட்டப்பட்டு பரிசோதகர்களால் சரிபார்க்கப்பட்டன, அதன் கணக்குகள் இதனடுத்த சஞ்சிகையில் வெளியிடுமாறு ஏற்பாடு செய்துள்ளோம்.

ப-ர்.

# பத்திரிகை.

3-வது பக்கத்தொடர்ச்சி

நம்மவர்களுள்ளே பெரும்பாலார்க்குப் பத்திரிகைகளி னுயர்வும், அதனுல் ஜனசமூகத்திற் குண்டாகு நன்மைகளும், இன்றளவும் நன்கு புலப்படாதனவே. கல்வி கேள்விகளால் நிறைந்த உயர்தரத்துப் புலவர் கள் தாமும் பத்திரிகை நலத்தை உண்மையாக அறியா திருப்பாரையின் நம்மவர்களுள் மற்றையோர் அதன் பெருமையை அறியா திருக்கிறார்க ளென்றல் வீண்வசர்த்தையேயாம். உண்மையாக ஆராய்ந்து சொல்லுமி டத்து மேனாட்டவர்களாகிய ஐரோப்பியர், அமெரிக்கர், எர்மானியர் முதலாயவர்கள் கல்வி ஆராய்ச்சிகளில் வல்லாராகி, வினைமாட்சியுற்று செல்வப்பெருக்கமும் படைவலியும் அரண்வலியும் உயர்வகப்பெற்றதும் பெருநிலவேந்தராய் நமதாணைவழி உலகந்தழ்க தாம் பெரிய நாகரீக நாய காய் உண்ணத வாழ்வைப்பெற்ற நிலைபெறுதற்குக் காரணம் பத்திரிகை களென்றே சத்தியமாய்ச்சொல்லலாம். அதனலன்றே மேலத்தேசத் தரசர்கள் பத்திரிகாசிரியர்கட்கு மற்றெத்திறத்தரைக் காட்டிலுஞ் தனி முதன்மைக்கொடுத்து ஓம்பித் தம்மரியலுக்குச் சிறந்த மந்திரத்தினை யாகக்கொண்டு போற்றிவருகின்றார்கள். மந்திரிகளாலும் மற்றையங்கள் களாலும் முடிந்தற்கு அரிய பெரிய காரியங்களெல்லாம் பத்திராசிரியர் கள் தத்துவ உபதேசங்களாற்றனே மேலதேசத்தரசர்கட்கு நன்முடி த்து வருகின்றன. சுருக்கி சொல்லுமிடத்து எக்காலத்து மெவ்விடத் திலும் யாவர்க்கும் அவர் விரும்புமி அரமாதி நான்குவகைச் சித்திகளே விரும்பியபடி அயல் நின்று தந்தருளுங் கண்கண்ட தெய்வம் பத்திரிகை களேயாம். அப்பத்திரிகைகளே வீண்கண்ட சமயத் தெய்வ ரூபமாக மதித்துப் பாராட்ட வேண்டு மென்பது துணிபு.

இத்தமிழ் நாட்டில் பற்பல சமாச்சாரப் பத்திரிகைகள் பலரால் காலந்தோறும் தொடக்கஞ் செய்யப்பட்டன. அப்படித்தொடக்கஞ்செ ய்யப்பட்ட பத்திரைகளுள் இடையூற்றினுல் நடைபெறும லொழிந்தன பல. இடையூறின்றி நடைபெற்று வருவனவில. ஒழிந்த பத்திரிகைக ளாலும் ஒழியாது நிலவுறும் பத்திரிகைகளாலும் தமிழ் நாட்டவர்கள் க டந்த காலத்தில் எய்தின நன்மைகள் அளப்பில. அந்நன்மைகளே தனி த்தனி முடியக்கூறப்புகின் பன்னெடுங்காலஞ் செல்லும். ஆயினும் அவற்றை யெல்லாம் தொகுத்து இது வென்ற ஒருவார்த்தையாகச் சொல்லின் தமிழ்நாட்டுச்சனங்களுக்கு ஆங்கிலேயராட்சிய முறைகளின் நுண்ணிய விவேக விளக்கமுஞ் சுவதந்திர சீவனத்திற்குரிய பற்பல முயற்சிகள் செய்தற்குக் காரணமாலும் சுதேச நேம அறிவொற்றுமை யும் அவைகளால் விளைந்த பயனென்றச் சுருங்கச்சொல்லலாம்.

# பரிமத் வள்ளலார் பத்திரிகை.

சுத்தசன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்திற்கும் விளங்கும். இதற்கு எவ்விதப்பட்ட தடைகளுமில்லை. தடையற்ற பெருநெறி விளக்கம் இக்காலத்தொட்டு அளவிறந்த நெடுங்காலம் விளங்கும். அதற்கப்பாலுக் கப்பாலும் விளங்கும்.

பலவகைப்பட்ட சமயபேதங்களும், சாஸ்திர பேதங்களும் ஆசாரபேதங்களும் போய் "சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம்" விளங்கும். அது கடவுள் சம்மதம். இது ❺ 29 வருஷத்திற்குமேல்.

இப்போது வருகிற கடவுள் சமய சாஸ்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்டு ஏற்பட்டுள்ள கர்த்தர்கள் மூர்த்திகள் கடவுளர்கள் தேவர்கள் அடியார்கள் யோகிகள் ஞானிகள் தலைவர்கள் முதலானவர்களில் ஒருவரல்லர். இப்படிச் சொல்லப்பட்ட எல்லாக் கர்த்தர்களும் எல்லா அடியார்களும் எல்லா யோகிகளும் எல்லா ஞானிகளும் எல்லாத்தலைவர்களும்தங்கள்தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர் பார்க்கின்றபடி எழுத்தருளி யிருக்கின்ற தனித்தலைமைப் பெரும்பதி. அவருக்கு சர்வ சித்தி கடவுள் என்று பெயர். சர்வ சித்தி கடவுள் வெளிப்படுங் காலத்தில் சர்வானுக்கிரகங்களும் விளங்கும்.

அவர் அருளா தான் பெற்றேன் பெறுகின்றேன் பெறுவேன் என்னை யடுத்த நீவிர்களும் பெற்றீர்கள் பெறுகின்றீர்கள் பெறுவீர்கள் அஞ்சவேண்டாம்.

சித்திவளாகம்<br>பிரசோற்பத்தியுகம்<br>சித்திசையீ 1உ

} ❶ திருவருட்பிரகாசவள்ளலார்.

---

* 29-க்கு மேலென்பது கலியுகம் 5029. 1. ❻ (1928 A.D.) கணக்குவாளர்களும் காலம் கடந்த மகத்துக்களும் ஒருவாறு விரும்புவீர்கள்.

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

# அருட்பெருஞ்ஜோதி

# அருட்பிரகாசம்.

எல்லாஞ் செயல் கூடுமென்னுணை யப்பலத்தே
யெல்லாம் வல்லான் றனையே யேத்து.

உத்தரஞான சிதம்பரம் ஷடாந்த சமரச சுத்த
சன்மார்க்க சங்க நிலையத்தினின்றும்

திங்கள் தோறும் வெளி வருவது.


| மலர் 1 | சாலை சகாப்தம் 61 வுனித் திங்கள் 11-ஞள். 1927 ஜூன் மூ 25வ பிரபவ வூண்டு வுனித் திங்கள் 11-ம் நள். | இதழ் 2 |
|---|---|---|


## திருச்சிற்றம்பலம்.

அருள்விளக்கே யருட்சுடரே யருட்ஜோதியுமே
யருளமுதே யருணிறைவே யருள்வடிவப்பொருளே
யிருள்கடிந்தென் னுளமுழுது மிடங்கொண்டபதியே
யென்னறிவே யென்னுயிரே யெனக்கினிய வுறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம்புரிகின்ற மணவாளா வெனக்கே
தெருளளித்த திருவாளா ஞானவுருவாளா
தெய்வநடத்தரசே கான்செய்மொழி யேற்றருளே.

## நேரிசை வெண்பா.

சித்தி புரத்தே தினந் தோறுஞ் சிற்கொளநட்
சத்தி விழா நீடித் தழைத்தோங்க—வத்திசையி
லுள்ளவரும் வந்தே யுவகை யுறுகமதத்
துள்ள லொழிக தொலைக்து.

## சமயம்.

சோழித் தமிழ்ப் பண்டிதர்.
(ஸ்ரீமத். ப. அ. முத்துக்கொண்டவராய பிள்ளை அவர்கள்.)

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

### வைதிகவேதாந்தம்.

**வேதப் பொருளின் விரிவைத் தள்ளிச்**
**சோதி யிலேவே சொல்லில் வேதாந்தமே.**

சுத்த வைதிக வேதாந்தமாவது, வேதங்களைச் சிரசிலே தரித்துக்கொண்டு தானு மறியாமலிருக்கிற உபநிஷத் பிரமான மான விவேக சிந்துவாகிற சாத்திரத்தில் திருதியப்பிரகரணம் தத்துவ சிருட்டி சொல்வது. இனி (சொரூபமாவது) சத்தி சக்கிரத்துக்கு ஞெப்தி மாத்திரமான ஞாதுரு ஞான ஞெயமாம். இவைக டங்குவதத் தானமாய் நிற்பது நிட்களநிர்மல நிகானந்த பரப்பிரம அத்வென்றறிக. இதை ஞானமென்றால் அறிகிற தில்லே. அஞ்ஞானமென்றால் மறப்பில்லே. அபாவ மென்றால் சுத்த சைதன்னியம் ஆனந்தசொரூபம். உள்ளதென்றால் வாங்கப் போகாது. இல்லே யென்றால் விடக்கூடாது. நித்திரை செய் பவனே எழுப்பும். எழுந்தவனே எச்சரிக்கும். எச்சரித்தவனே போ கிக்கச்செய்யும், இப்படிச்செய்தாலும் தானென்றிலும் தோயா மலும் ஒரு பெரிய படிப்பருவதம்போல பெரியதி லெல்லாம் பெரியது கலங்க மில்லாதது பிடித்தால் கடினப்படாம லிருப்பது பிரம சொரூ விலக்கண மென்றறிக. இது, ஆகாசம்போல் ஒளி யாய் வியாபியாய் வியாபக வெளியாயிருக்கும். பிர்மாதி பஞ்ச மூர்த்திகள் தங்கள் வியாபாரஞ் செய்து ஓய்வன வேளையில் இவ் ப்பாறும் பொருட்டு நிஜமான அங்கே வித்தேய வித்தையில்லே, அகம்மியஸ்வ சொரூப வேத்தியம் அதுவே நியாகிற பிரமமென் றறிக. (இனிதடத்த லெக்ஷணமாவது) ஆகாச வீதியிலே மேக சஞ்சாரம் காண்பித்தாற்போல் முன் சொன்ன பிரமத்திலே மாயா படலாகாண்பித்தது. இது, கெட்டால் சுயம்புவாயிருக் கும். இந்தமாயா தேவி ரஜிலே பிரமாதி தேவதைகளும் அப

மிதபாலர்களும் பிறந்தார்கள். இந்த மூலமாயைக்கு முன் சொன்ன பூரணசைதன்னியமே முதலென்றறிக. இந்த மாயை பிரமத்திலே வுள்ளது. இது விவர்த்தனம் இது வேதாந்த சித்தாந்த உபநிஷத்துக்களாலே நிச்சயிக்கப்பட்டது இது பிரமாண சித்தம். இனி விவர்த்தனமாயை பிரமத்தைப் போல் தானும் நிர்விகாரமுமாய் அன்னிய ஆபாசமாயிதின் நிசாகாரம் விகற்பி யாமலிருக்கும். சூரியபிரகாசத்தாலே கானற்சல முண்டாவது போல் பிரமத்தில் விவர்த்தங்கள் காண்பித்தது. இருளிற் பழு தைபாம்புபோல் தோன்றிற்று. இந்த மாயாபிரம விவர்த்தனம் இங்கே குணசாமிய மென்பது சங்கேதம் இந்த வாக்கியஞ சாங் கியன் பிரகிருதி புருஷனென்று கொண்டான். இது குணத்தி சைய சம்மதம். இது ஈஸ்வரனுள் மணிபவத்தை இந்த விவர்த் தனமாயை முன்சொன்ன பூர்ணசைதன்னிய பிரமசிருட்டியால் இந்த மாயை தானே மகா மாயை யாயிற்று. இஃதே சுத்த சாத்மீகமான ஸ்வரூப சந்தானமாய் நானே பிரம மென்றுயிற்று இது மித்தியா பாசமாம். இஃதே பிரமவர்த்தனம். அஃதெப் படி யந்த மகா மாயைக்குப் பிரமகாரியினுல் ஞாநபூர்த்தியங் குரித்ததென் னென்றால், பிரம மெத்தனை யுண்டு, அத்தனையும் வியாபித்து இந்த மாயா தேவி தானே பிரமமாயிருக்கும இந்த மாயை பிரமத்தின்முன்பு இல்லாமையே காண்பிக்கும், பிரம மில் லாதபோது தன்னைத்தெரிவித்துக்கொண்டு பிரமாதி தேவதை களைத் தன்னகத்திலடக்கிக்கொண்டு கடனுகடன் சாமர்த்தியத் தோடிருக்கும் இது அசம்பாவனு மாயை அனிர் வாச்சியம் ஆகையாலே மித்தியாப் பிரார்த்த வியார்த்த ஆபாசமாயிருக் கும். இந்த மகா மாயை பிரமசிருஷ்டியாலே ஈஸ்வரனுண்டா னென். இவனுக்குப் பரமபுருஷ னென்றும். பரமாத்மாவென்றும் பெயராம். இவனைச் சாங்கியன் பிரகிருதி புருஷனென்று கொ ண்டான் இந்தப் பரமபுருஷனுக்கு இந்த மாயை நிஜசத்தியாயி ற்று இந்த மாயை யோடே கூடின பரமபுருஷனைச் சகுணப்பி ர்மா யிஸ்வரனுய்ப்பரந்தாமனுய் ஆதிமூலமாய் வாசுதேவனென்று வைணவர் கொள்ளுவர். இந்தப் பரமபுருஷ னெப்படி யென் னில், எல்லே கடமுண்டாயிற்றே அதற்குமுன் ஆகாச மிருப்

பது போல மாயைக்கு முன்னே சைதன்னியம் வியாபித்திருக்கும் சமுத்திர தண்ணீருக்கு முன்னே ஜலம் வியாபித்தாற் போல மாயை யகரூரித்த விடமெல்லாம் அதற்கு முன்னே பிரமம் வியாபித்திருக்கும். இந்த மாயையிலே வியாபித்த பிரமேசகுணம் இந்த மாயை போகிட கூடாது நிற்குணம் இது விவர்த்தன மூலப்பிரகிருதிக்குப் பின்னமாயிருக்கும் இதற்கு சாட்சியாய் நின்று பிரகிருதியை யவனிவான் பிரகிருதி யவனே யறியாது. அவனிராபாசன் இது பிரகாச சூபம் அவன் சுயம்பிரகாசசூபன் பிரகிருதி வேத்தியம் அவன் சேக்தா அது ஜெயம். அவன் ஞாதா இத்தப்பிரகிருதி புருஷனுக்கு சகவாசனையிருப்பர். இவர்களுக்கு வர்ணங்களில்லை. பிரகிருதிய மூர்த்திகள் இவர்கள் சொரூப நிலைமைத் தன் நிஜ சொரூபத்தில அறியவேண்டும். இத்தப் புருஷன் பரமாத்மா சுயஞ்சோதி விஞ்ஞானாத்மா ஜீவமுதலான பேரனேகமுண்டு இந்த பரமாத்மா தானே ஜீவத்வத்தை யடையவேண்டி மகா மாயை நோக்கிப்பார்த்த போது பிரதிபிம்பமாகிற மகத்துவமுண்டாயிற்று. இந்த மகத்துவத்துக்கு அவ்வியாகிருத மென்றும் பேர். இந்த ஜீவனுகவேண்டுமென்றவன் ஞானவிக்கிரகம் பரமேஸ்வரன், ஸர்வாத்மா, நிர்விகாரன், அவன் சொரூபமே யல்லால் தன் சொரூபத்தில் மறப்பில்லை பிரவர்த்தி நிவர்த்தி செய்வதில் சமர்த்தன் இவனெருவனே கர்த்தா இவனது அஞ்ஞான அவதாரமான பிரமாதிகளெதற்கென்றால் இவன் சரணப்பிரமாயை யோடேகூடி சிருட்டியாதி செய்வதற்கென்றறிக. இந்த மகா மாயையின் சுத்த பிரதிபிம்பமான மகத்துவத்தோடு முன் சொன்ன பரமபுருஷன்கூடி பிரதிபிம்பித்தபோது சீவாத்மாவென்றும் பெயராம். இந்தசுத்த மாயைமகத்துவம் இரண்டுக்கூடினது கூடத்துவமாகிறதத்துவ கெற்பத்திலே மன்னனமாயிற்று. இது பரமபுருஷன்காரணதேகம் இது வருத்திரனுலே சங்கரிக்கச் செய்யும் அதற்கு அஃதே வீடு இந்த ஜீவாத்துமாவுக்குத் தத்துவங்கள் கூட்டிப்புகிப்பிக்க வேண்டி முன் சொன்ன பரமபுருஷன் அவ்யாகிருதத்தில் கூடி அதிஷ்டித்து அங்கே திரிவித ஆங்காரமுண்டாயிற்று மாயையின் குணசேட்டையாலே சாத்வீக ராஜச தாமஸாங் காரத்திரயம் மூலமாயிற்று இதில் சாத்வீகத்தில் ஞானசத்தியும் இரா

ஜசத்தில் கிரியாசத்தியும் தாமசத்தில் திரவியசத்தியுமாகி மூன்று மூண்டாயிற்று. இதில் திரவியசத்தியைச் சர்வேஸ்வரன் பார்த்த போது பின்னுமொரு தாமஸாங்காரமும் பஞ்ச தன் மாத்திரையும் பஞ்சபூதமு மூண்டாயிற்று. ஆகையாலே சத்தாதி விஷய பஞ்சகத்துக்கும் காரணகாரிய பாவமாயிற்று பின்பு கிரியாசத்தி சமேதனு யதினாலே இராசதாங்கார முண்டாய் இதில் ஞானேந்திரியம் கன்மேந்திரியம் பிராண பஞ்சகம் ஆக 15-ம் உண்டாயிற்று. பின்பு ஞான சக்தியை அதிட்டித்தபோது சாத்வீகாங்காரமுண்டாய் இதில் அந்தக்கரண சூரியாதி தேவதை யுண்டாயிற்று. இந்த மூன்றிலும் சர்வேசன் கூட அன்னியகுண தத்துவ முண்டாயிற்று. இதில் சாத்வீகாங்காரத்தில் தத்துவந் தொக்கு சாதகமாயிற்று. இனி ராஜதாங்காரத்தில் சுரோத்திராதி ஞானேந்திரியம் தோற்றுத சாத்திய சாதகமாய்ச் சகலவிஷயமும் பதுக்கப்பட்டது. இதை கர்த்தா போக்தாவென்பர். இனி தாமதத்தில் தத்துவம் போக்கிய சாதகமாயிற்று இனி கர்த்தா காரணகாரியம் போக்தா போக போக்கியம் இது திரிபுடியாம். பின்பு அந்தகரண போகம் இந்திரியமே போகத்துக்குச் சாதனம். பஞ்சபூத விஷய ரூபத்திலே இருந்து போக்கியமாம். ஒவ்வொரு போக்கிய சாதனத்துக்கும் மூன்று கூடவேண்டும். அங்கே சைதன்னியம் நிற்சங்கமாய் ஒவ்வொரு பூதத்தில் வியாபித்திருக்கும். பரஸ்பரமாய் ஆகாச அம்சம் அந்தக்கரணம் 5. அப்பு அம்சம் விஷயம் 5. வாயுவம்சம் பிராணாதி வாயு 5. அக்கினியம்சம் ஞானேந்திரியம் 5. பிரிதிவியம்சம் கன்மேந்திரியம் 5. இதில் ஒன்றி லொன்று கலக்கையால்பஞ்சீகரணமென்றறிக. இதுகளில் ஆகாசத்திலிருந்து அந்தக்கரணம் சமானவாயு வாதாரமாய் சுரோத்திர துவாரத்திலிருந்து வாக்கு சகிதமான சத்தங்கொள்ளும் மனமானது வாயுவிலிருந்து வியான வாயுவாதாரமாய் தொக்கிந்திரியத்தாலே பாணி சகிதமாய் பரிசங்கொள்ளும். இனி புத்தியானது அக்கினியிலிருந்து உதானவாயுவாதாரமாய் சக்ஷுரிந்திரியத்தாலே பாத சகிதமாய் ரூபங்கொள்ளும். இனிச்சித்தமானது அப்புவிலிருந்து அபான வாயுவாதாரமாய் சிங்குலையால் குய்ய சகிதமாய் ரசங்கொள்ளும். இனி யாங்காரமானது பிருதிவியிலிருந்து பிராணவாயு வாதாரமாய் ஆக்கிராணத்தாலேபாயு சகிதமாய் கந்தங்கொள்

ஞும். இவ்வாறு சத்தாதிவிடயங்களைக் கொள்வதென்றறிக. இனிப்பஞ்சபூதமும், பஞ்சவிஷயத்திலிருந்து தாமசாங்கார அம்சமாய் அவ்வியக்தமாயிற்று. அதீதே பஞ்சமகாபூதம் அதீதே சொரூபத்துக்கும் வந்தது. பரஸ்பரகூட்டமாகிய இந்த கூட்டங்களை யொருவிடத்திலே கூட்டவேண்டுமென்று சுஸ்வரன் மாயையிலே பிரேரித்தா னென்றறிக. இதெல்லாம் சங்ஷேபமாய் சொல்வது முன் சொன்ன பிரமம் விவர்த்தன மாயையை யதிட்டித்தபோது மகாமாயையாய் சுத்தமாயை யுண்டாயிற்று. இந்த மாயையிலே பிரமம் அதிஷ்டித்தபோது பரமாத்மாவாய்ப்பிரதித்தம்பித்து இந்த சச்சேவஸ்வரன் மகாமாயையைப் பார்த்தபோது மகதத்துவமுண்டாய் மகதத்துவத்தில் அந்த பரமாத்மா பிரதிவிம்பித்தபோது சீவனுண்டாயிற்று. இப்பாலிந்த ஜீவனுக்காக தத்துவசிருட்டி யுண்டாயிற்றென்றறிக.

(தொடரும்)

## தமிழர்.

(திரிலோயாளி N.தம்பியப்ப செட்டியாரவர்கள்.)

இவற்றால் தற்காலங் காணப்படுகிற பசிபிக்மகா சமுத்திரமும் இந்துமகா சமுத்திரமும் பூர்வத்தில் கண்டங்களாயிருந்து பின்னற் கடல் கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றன. பசிபிக் மகாசமுத்திரத்தின் தென்மேற்கு திசையில் கொச்சின் சைனாவைச் சேர்ந்த கம்போஜா வென்னும் வழக்கத்திலும் காம்போடியா வென்று ஆங்கிலத்திலும் காம்போஜ்என்று தமிழ்நாற்களிலும் பெயரிடப்பட்டுள்ள நாட்டின் ஓர் பாகத்தில் ஓர் பேரூரின் கண்ணே சுமார் 40 மயில் சுற்றளவுள்ள மதிலும் அதனுள் நூற்றுக்கணக்கான இந்துமத தேவாலயங்களும், பாரதம், பாகவதம், இராமாயணம் முதலான நூற்களிற் கண்டுள்ள கதைகளின் சிலா சூபமாகவுஞ் சித்திரா சூபமாகவும் முறையே அமைக்கப்பட்டும் வரையப்பட்டும் ஐம்பத்தாறு தேசத்து மகுடமன்னர்கள் வீற்றிருத்தற்கான ஆசனங்களும் பலவித்தகாக்ஷிகளும் இம்

றைக்கும் காணக்கூடிய விதமாக அமைந்துள்ளவற்றை ஓர்பிரஞ்சி சரித்திராசிரியர் கேரில் போய்கண்டறிந்து புத்தக ரூபமாக வெளியிட்டுள்ளார். யோசிக்குமிடத்து தமிழர்கள் இந்துமகாசமுத்திரமும் பசிபிக்மகா சமுத்திரமும் கடல் கொள்ளாடல் கண்டுள்ளாயிருந்த காலத்து அனேக ஆயிரமாண்டுகளுக்கு முன்னரே ஆங்கு வதிந்து வந்தவர்களென்றும் கல்வி, அறிவு, கைத்தொழில், நாகரீகம் முதலியவற்றில் உலகத்தில் உன்னத நிலையில் சிறப்புற்றிருந்தார்களென்பதும் தெற்றெனவறிவதற்காதாரமாகயிருக்கின்றன. இற்றைக்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரே சாலோமன் அரசனின் காலத்தில் பாபிலோன் சாச்சியத்தில் இறக்குமதியான குரங்கு மயில் முதலியன ஈப்ரூ பாஷையில் தமிழ் மொழிகளாற் குறிக்கப்பட்டிருப்பதிலிருந்து அக்காலத்தில் இவ்விரண்டு நாடுகளுக்கு மிருந்தசம்பந்தம் நிதானிக்கப்படுகிறது. வால்மீகர் காலத்தே யெழுதப்பட்ட வடமொழி இராமாயணத்தில் தமிழ் மக்களின் நாகரீகமும் தமிழ் நாட்டின் சிறப்பும் வெகுவாய் அவரால் அறியப்பட்டிருந்தன. தமிழ் நாட்டினின்றும் க்ரேக் சீரியா முதலிய தேசங்களுக்கு ஸ்தானாதிபதிகள் சென்றனரென்பதும், பாண்டிய அரசன் அக்காலத்து உரோமச்சக்கரவர்த்தியாகிய அகுஸ்துசாயரிடம் ஸ்தானாதிபதிகளையனுப்பி சினேக சம்பந்தஞ்செய்தனரென்றும், சரித்திரங்கள் கூறுகின்றன. இந்தியாவிலிருந்து உரோம சாச்சியத்திற்கு அக்காலத்து யேற்றப்பட்ட சரக்குகளின் விலை 55000000 (Sisters) 7500000 ரூபா என பிளீனி என்பவர் கி. பி. 77 வருஷத்தில் எழுதியிருக்கிறார். இதற்காதாரமாக இப்போதுந் தமிழ் நாட்டில் ஆங்காங்கே காணப்படும் உரோமநாணயங்களுறுதிசெய்யும். தமிழ்மக்கள் பெரிய வியாபாரிகளாயிருந்தார்களென்பதற்குச் சான்றாக சோழ நாட்டுக்கப்பல்கள் கி. பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் இந்தியகரைகளில் மாத்திரமல்லாது வங்காளக் குடாவைக் கடந்து மலாயத் தீவுகள் வரையும் செல்வதுண்டு என வின்ஸன் ஸ்மித் என்னும் சரித்திர நூலாசிரியர் கூறியுள்ளார். தமிழ் இலக்கியங்களிலு மிதனைக் காட்டும் ஆதாரங்கள் பலவுள. மதுரைக் கோட்டை வாசலில் யவனர் காவலிருந்தனர், யவனர் கொண்டு வந்த மது வகைகள் என்பன கவனிக்கத்தக்கன. இங்ஙனமாக தமிழ் மக்களின் பூர்வ நாகரீம் செல்வச்சிறப்பு அரி

கியல் மேன்மை முதலியவற்றை இற்றைக்கும் காட்டுவதற்கான யேதுக்கள் பலவுள். தமிழர் வீரத்தைப்பற்றி ஆராயப்புகின் இத் தமிழ்நாட்டில்முடியுடையமன்னருக்கும்மேற்றுணையாயமைந்த தானையானை குதிரை என்னும் மூவகைப் படையின் பெருக்கமும் அளவிடப்படாததாகும். தேர் குதிரைகளாலிழுக்கப்படுவதாகலின் வேறு கூறப்பட்டதில்லை. இதனை 'தானை யானை குதிரை யென்ற நோனுதுட்குமூவகை நிலையும்' என்னும் புறத்திணையியற் சூத்திரவுரையால்அறிக இப்படைகளேமுதற்படை இடைப்படை கடைப்படையென மூன்றுகஅணிவகுத்துரைப்பர். மேலும்இவற்றின் முறையே தாசி இடை கூழை யென்னும் பெயரால் வழங்குவர். சோழன் நலங்கிள்ளின் படைப்பெருக்கினைச் சிறப்பித்துக் கூறுமிடத்து ஆலத்தூர் கிழார் என்னும் புலவர் படைசெல்கின்ற வழியிலுற்ற பனைமரங்களில் தங்கினைத்தலைப்படையும் பழத்தினை பிடைப்படையும் அப்பழத்தினாலுண்டாகிய கிழங்கினை கடைப்படையும் நகரும்படி அத்தினைகளாகப் படைசென்றது. என்னுங் கருத்தில் ''தலையோர் நுங்கின் தீஞ்சேறு மிசைய விடையோர் பழத்தின் பைங்கணிமாந்தக் கடையோர் விடுவாய்ப் பிசிசோடு சுடுகிழங்குநுகர்'' என வுரைத்ததனால் இவ்வரசர் படைப்பெருக்கும் நன்கு உணரத்தகும். இவற்றுள் யானைப்படை முன்னிற்றலையும் அவற்றையெறிதலையும் போருக்குரிய சிறந்த வீரமென்க. களிறெறிந்து பெயர்தல் காளைக்குக்கடனே'' (புறம் 312) என்பர் வேற்றரசரது ஆயிரமியானைகளை ஒரு போரில் மடிவித்த வீரனை பரணி யென்பதேர் நூலால் புலவர்களால் அவனது போர்த்தொழிலைப் புகழ்ந்து பாடப்பட்ட செந்தமிழ்ப் பாடல்கள் எண்ணிறந்தன. முற்காலத்தில் கருணகரத்தொண்டைமானென்னுஞ்சோழனுடைய படைத்தலைவன் கலிங்கப்பட்டினத்து ஆயிரம்யானைகளை யெறிந்துவென்றமையை கலிங்கத்துப்பரணி நூலாற்புகழ்ந்துளார். மற்றொருசோழன் தனக்கு நேர்ந்தபோரில் தன்னெருகளிற்றினால் தன்பகைவரது ஆயிரங் களிற்றினையும் அகப்படுத்தினனென்று புகல்வர். இதனை ''பற்றலரை வெப்பத்தடுகயத்தில் வேழங்களாயிரமூங் கொப்பத் தொருகளிற்றூர் கொண்டோனும்'' எனவரும் விக்கிரம சோழனுலாவானும் அறிக.

(தொடரும்)

# நூல் வெளியீடு.

## திரிபதார்த்த ரூபாதி தசகம் என்னும் தசகாவ்யம்.

(இதன் பிரபாவம் ஏழினுர்—சிகாழி,

ப. அ முத்துத்தாண்டவராய பிள்ளை,)

(13–ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றை நோக்கி இம்மடாலயத்து ஆன்ரோதுபவ நிலையையும், உபய கலைகளினும் ஆழ்ந்த கல்வித்திறத்தையும், சித்தாந்த நிரூபணஞ்செய்யுமிடங்களில் அன்னுர் செய்யும் கண்டன மண்டனங்களையும் அடியேன் கண்டு விம்மிதனுகாத நாளில்லை.

இத்துணைச்சிறப்பு வாய்ந்த திருத்தருமபுரத் திருமடாலயத்துத் தாபனுசாரியார் ஸ்ரீகுருஞானசம்பந்த மூர்த்திகளாவார். இவரது ஞானபிதா கமலை ஞானப்பிரகாசர். இவரது ஞானத்தந்தை பழுதைகட்டி ஞானப்பிரகாசர். இவரது ஞானத்தமப்டர் பழுதைகட்டிச் சிற்றம்பலவர். இவரது ஞானசுத்தர் காழிச் சிற்றம்பலநாடிகள். இவரைப்பெற்றர் காழிக்கங்கை மெய்கண்டார். இவரை ஈன்ரூர் காழி மச்சுச்செட்டி அருணுசலசிவாயர். இவரை அளித்தார் கொற்றவன்குடி உமாபதிசிவர் (1306). இப் பெரியார் சைவ ஸ்ரீமாந் மெய்கண்டதேவரது மாபினர் (சிவப்பிரகாசம், நேவர்) இனி, பந்தம் அகல அருளும் 1, ஞானசம்பந்தரது ஞானசுதர் பரம்பரையும் 2, ஆனந்தபரவசர் அன்னுர் திருமுடியடைவினர் 3. சச்சிதானந்தர் 4. மாசிலாமணியார் 5, ஞானசம்பந்தர் 6, ஞானசம்பந்தர் 7, திருவம்பலவர் 8, அழகிய சிற்றம்பலவர் 9, திருநாவுக்கரையர் 10, சிவஞானர் 11, சச்சிதானந்தர் 12, முத்துக்குமாரர் 13, ஞானசம்பந்தர் 14, கந்தப்பர் 15, மாசிலாமணியார் 16, சச்சிதானந்தர் 17 மாணிக்கவாசகர் 18, சிவஞானர் 19, மாணிக்கவாசகர் 20, சிவஞானர் 21, சச்சிதானந்தர் 22. மாணிக்கவாசகர் 23. சுப்பிரமணியர் (நீடுழிவாழ்க) என்பார்.

காழித் தத்துவப்பிரகாசர் தமது குருவாகிய காழிச்சிற்றம் பலநாடிகளைக் கங்கை மெய்கண்டார் ருள்ளடக்கியும், சைவசமய

சாரியார் நால்வசோடு துர்வாசர், பிருகு, வியாக்கிரபாதர், தவுசி பதஞ்சலி, காரதர், உபமன்யு என்பவர்களைச்சேர்த்துங்கூறுவர். பின்னர்க்குறித்த துர்வாசாதியாது பிரதிஷ்டை ஆரூர் சிதம்பரம் முதலிய க்ஷேத்திரங்களில் இன்னும் காணலாகும். இக்குருமரபு விவரம் முத்தி நிச்சயவுரை சந்தானவகவல் சந்தானி வரலாறு முதலியவற்றுட் கண்டதும் கர்ணபரம்பரையிற் கேட்டதுமாம். தருமைப் பரமாசாரிய குருஞானசம்பந்ததேசிகர் இயற்றிய நூல்கள் சொக்கநாதர் வெண்பா வெண்பாமாலை, கலித்துறை ஞானப்பிரகாசமாலை முத்திநிச்சயம் சிவபோகசாரம் பேரானந்தசித்தியார் திரிபதார்த்த தசகாரியம் தசகாரியவுகவல் முதலாயின வென்பது சிவஞானதேசிகர் காலத்துச் சிவாநந்த முனிவர் இயற்றிய சாம்பிரதாய தீபத்தா லறிந்தது. தருமை யாதீனத்துப் பண்டார சாத்திரங்களாகிய 1 சதமணிக்கோவை 2. ஞானதீக்ஷாத்திரயம் 3. துகளறுபோதம் 4. ஞானப்பிரகாசரது திருச்செந்தூரகவல் 5. தத்துவப்பிரகாசம் 6. ஞானப்பிரகாசரது தசகாரியம் 7. சிவபோகசாரம் 8. முத்திநிச்சயம் 9. பேரானந்த சித்தியார் 10. திரிபதார்த்தரூபாதி தசக தசகாரியம் 11. பதிபசுபாசப்பனுவல் 12. சிவாநந்தமாலை 13. சாம்பிரதாய தீபம் 14. ஞானுவரணவிளக்கக் குறள் இவற்றுள் 10-வது சிரந்தமாகவுள்ளது இந்நூல். இம்மூன்று பத்துத்திருவெண்பாக்களையும் அவற்றிற்குக் குருசுவாமிகள் நியமனப்படி பாராயணத்துக்கென்று ஏற்படுத்திய காழிதத்துவப்பிரகாசரது பதினொரு திருவிருத்தங்களையும் உடையது. இதன் தாற்பரியமே தசகாரியவகவல். முதற்கண் இத்தசகாரியத்தின் பிரபாவத்தை எழுதி, அதன் பிறகு மஹாசந்நிதானம் கட்டளையிட்டருளின் தசகாரியவகவலையும் பிரசுரிக்கலாம் என்று கருதியுள்ளேன். இப்பிரபாவம் அடியேன் சிற்றறிவிற் கெட்டியவரை எழுதியதாகலின் பேரறிவாளர் என்பிழை பொறுத்தருளுதல் கடனும். நன்றுக.

(இனி நூல் தொடரும்)

# சிவகாருணிய ஒழுக்கம்.

(திருவருட்பிரகாச வள்ளலார்)

(19-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனல் சிவகாருணிய ஒழுக்கமென்ப தென்னவெனில்:— சீவர்களுக்கு சீவர்கள் விஷபமாக வண்டாகின்ற ஆன்ம வருக்கத்தைக் கொண்டு தெய்வவழிபாடுசெய்து வாழ்தலென்ற றியவேண்டும். சீவர்கள் விஷயமாக வான்மவருக்க மெப்போது உண்டாகுமெனில்:— சீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை எ ளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை யனுபவிக்கக் கண்டபோதாயினும் கேட்டபோதாயினும் இவ்வாறுண்டாகுமெ ன்றறிந்த போதாயினும் ஆன்மவருக்க முண்டாகுமென்றறிய வேண்டும். சீவகாருணிய வொழுக்கமுண்டாவதற்கு உரிமை எது வென்னில்;—சீவர்களெல்லாம் மொருதன்மையாகிய இயற் கை யுண்மை ஏகதேசங்களாய்ச் சர்வசக்தியுடைய கடவுளால் சிருட்டிக்கப்பட்டபடியால் ஒருரிமையுள்ள சகோதரர்களே யா கும். சகோதரர்களு ளொருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகி ன்றபோதும் துக்கப்படுவாரென் றறிந்தபோது மவரைத் தமது சகோதரரென்றுகண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண் டாவது பழைய வான்ம வுரிமை யென்றறியவேண்டும். சீவர்கள் துக்கப்படுகின்றதைக் கண்டபோதும் துக்கப்படுமென் றறிந்த போதும் மற்றொரு சீவனுக்கு உருக்கமுண்டாவது பழைய வான் மவுரிமை யென்றறியவேண்டும். சீவர்கள் துக்கபடுகின்றதைக் கண்டபோதும் சிலர் ஜீவகாருண்ணியமில்லாமல் கடினசித்தர்க ளாயிருக்கின்றூர்கள். இவர்களுக்குச் சகோதர வுரிமையில்லாமற் போவது ஏன் என்னில்:—துக்கப்படுகின்றவரைத் தமது சகோ தரரென்றும் துக்கப்படுகின்றூரென்றும் துக்கப்படுவாரென்று ம றியத்தக்க வான்மவறிவு ஏன்கின்ற கண்ணனது அஞ்ஞான காச த்தால் மிகவும் ஒளிமழுங்கினபடியானும், அவைகளுக் குபகார மாகக்கொண்ட மனமுதலான வுபகரணங்களாகியகண்ணடிகளும் பிரகாச பிரதி பலித மில்லாமல் தடிப்புள்ளவைகளாக விருந்தபடி யாலும் கண்டறியக் கூடாமையாயிற்று. அதனல் சகோதர வுரி

யையிருந்தும் சிவகாருணிய முண்டாகம லிருந்த தென்றறிய வேண்டும்.

இதனால் சிவகாருணியமுள்ளவர்கள் ஆன்ம திருஷ்டி விளக்கமுள்ளவ ரென்றறியப்படும். சிவர்களுக்குப் பசிதாகம பயமு தலியவற்றால் வருந்துன்பங்களெல்லாம் மனம் கண் முதலிய கரணேந்திரிய வனுபவங்களல்லது ஆன்ம வனுபவங்களல்ல; அதனற் சிவகாருணியங் கொள்வதில் விசேஷ பிரயோசனமில்லையெனினில் இந்தத் தூலதேகத்தில் சீவனுக விருக்கிற வான்மாவும் அறிவுக்கறிவாயிருக்கிற கடவுளியற்கை விளக்கமுந் தவிரக் காரணம் இந்திரிய முதலிய மற்றவைகளெல்லாங் கருவிகளாகிய தத்துவசடங்களே யல்லது சித்துக்களல்ல; ஆதலில் சுகதுக்கங்களைச் சடங்களனுபவிக்க வறியாது, செம்மண் சுந்தோஷித்தது துக்கித்தது என்று சொல்லப்படாது: அதுபோல்; மனஞ்சந்தோஷித்தது துக்கித்தது என்று சொல்லப்படாது; செம்மண்ணினுல் தேகவாழ்க்கைக்கு வீடு கட்டிக்கொள்வதுபோல மனமுதலான கரணேந்திரியங்கள் சிவவாழ்க்கைகருக் கடவுளால் கட்டிக்கொடுக்கப்பட்ட ஒரு சிரியவீடாகும். இன்ப துன்பங்களை வீட்டிலிருக்கப்பட்டவன் அனுபவிப்பானல்லது வீடு அனுபவிக்க மாட்டாது, அன்றியும் காசத்தினுல் ஒளிமழுங்கப்பட்டு உபகரணங்களாகிய கண்ணாடிகளாற் பார்க்கின்ற கண்கள் துன்பவிஷயத்தைக் கண்டபோது அக்கண்கள் நீர் சொரியுமே யல்லதுகண்ணாடி நீர் சொரியமாட்டாது. ஆகலில், ஆன்ம திருஷ்டிக்கு உபகரணங்களாக விருக்கின்ற மனமுதலான கருவிகள் சுகதுக்கங்களை யனுபவிக்கமாட்டாது, ஆத்மாவே யனுபவிக்கு மென்றறியவேண்டும், ஒரு சீவனுக்கு சுகம் நேரிட்டபோது மனம் மகிழ்கின்றது, துக்க நேரிட்டபோது மனந்தளர்கின்றது. ஆக சுகதுங்களை அம்மனம் அனுபவிப்பதாக வறியப்படாதோ வென்னில்:—

அறியப்படாது. பளிங்கினுற் செய்த வீட்டினுள்ளிருக்கின்ற வீட்டுத்தலைவனின் தேகவிளக்கமுந் தேகச்சோர்வு மத்தப் பளிங்குவீட்டில் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுவது போலுங் கண்களின் மலர்ச்சியுஞ் சோர்வு மக்கண்களிலிட்ட உபகரணங்களிற் பிரதிபலித்துப் புறத்திற் றோன்றுவதுபோலும் சுக

துக்கங்களால் ஆன்மாவுக் குண்டாகிற மகிழ்ச்சியும் தளர்வும் மனமுதலான கரணேந்திரியங்களிற் பிரதிபலித்துப் புறத்திற் றோன்றுகின்றது. ஆகலில் சுகதுக்கங்கள் ஆத்மாவுக்கே யனுபவமென்றும், சுகதுக்கங்களே யறிந்து வனுபவிப்பதற்குக் கரணேந்திரியங்களான்மாவுக் குபகார கருவிக ளென்றுமறியவேண்டியது. கடவுளால் சிருட்டிக்கப்பட்ட சிவர்களிலேனேகர் பசி தாகம், பயமுதலியவற்றால் மிகவுந் துன்பப்படுகின்றது என்னெனில்:— முன்தேகத்தில் சிவகாருணிய வொழுக்கத்தை விரும்பாமல் கடினசித்தர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த சிவர்களாதலாற் கடவுள் விதித்த அருளாக்கினைப்படி பசி தாகம் பயமுதலியவற்றால் மிகவுந் துக்கப்படுகிறார் களென்றறிய வேண்டும்.

முன்தேக முண்டென்பது எப்படியென்னில், ஓர் வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய்யவந்த சம்சாரி அதற்கு முன்வேறொரு வீட்டில் குடிக்கூலிக்கொடுத்துக்குடித்தனஞ் செய்திருந்தானல்லது வீடில்லாமல் குடித்தனஞ் செய்யமாட்டா னென்றும், இப்போது வந்த வீட்டினுங் கலக நேரிட்டால் இன்னும் வேறொரு வீட்டில் குடி போவானென்றும் அறிவதுபோல் இந்த தேகத்திலாகாரக்கூலிக் கொடுத்து குடியிருக்க வந்த சிவன் இதற்கு முன்னும் வேறொரு தேகத்திலந்தக் கூலியைக்கொடுத்து சீவித்திருந்தானல்லது தேக மில்லாமல் சீவித்திருக்கமாட்டா னென்றும் இந்த தேகத்தினும் கலக நேரிட்டாற் பின்னும் வேறொரு தேகத்தில் குடிப்போவானென்றும் துணியவேண்டும். ஆதலால் முன்னும் பின்னுஞ் சீவர்களுக்குத் தேகங்கள் நேரிடுமென்றறிய வேண்டும். (தொடரும்)

## அன்பு.

(22-ம் பக்கம் தொடர்ச்சி)

தோலெலாங் குழைந்திடச் சூழ்நரம் பனைத்து
மேலெலாங் கட்டவை விட்டுவிட் டியங்கிட
னன்பெலா நெக்குநெக் கிவளிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசைபெலா மெய்யுறத் தளர்ந்திட
இரத்த மனைத்து மூள்ளிறங்கிடச் சுக்கில
மூரத்திடை பந்தித் தொருதிரளா யிரு

படலெலா மூனீ மலர்ந்திட வமுத
மூடலெலா மூற்றெடுத் தோடி நிரம்பிட
ஒண்ணுதல் வியர்த்திட வொளிமுக மலர்ந்திடக்
கண்ணிய வுயிர்ப்பினிற் சார்ந்தக் கதம்பிட
உண்ணகை தோற்றிட வரோமம் பொடித்திடக்
கண்ணினீர் நெருக்கிக் கால்வழிச் தோடிட
வாய்குழைத் தலறிட வள்ர்செவித் தூனகளிற்
கூயிசைப் பொறியெலாங் கும்மெனக் கொட்டிட
மெய்யெலாங் குளிர்ந்திட மென்மார் பசைந்திடக்
கையெலாங் குவிந்திடக் காலெலாஞ் சுலவிட
மனங்கனிந் தருளிட மதிகினறத் தொளிர்ந்திடர்
வினம்பெறு சித்த மியைந்து களித்திட
அகங்கார மாங்காங் கதிகரிப் பமைந்திடச்
சுகங்காண வுள்ளக் தழைத்து மலர்ந்திட
அறிவுரு வனேத்து ;மானக்க மாயிடப்
பொறியுறு மான்மதம் போதமும் போயிடத்
தத்துவ மீனத்துக் தாமொருங் கொழிந்திட
சத்துவ மொன்றே தனித்துகின் றேங்கிட
உலகெலாம் விடய முளவெலா மறைந்திட
வலகிலா வருளி ஞசைமேற் பொங்கிட
என்னுளத் தெழுந்தயி செல்லா மலர்ந்திட
வென்னுளத் தோங்கிய வென்றனி யன்பே.

என் ஸ்ரீமத் வள்ளலார் அருட்பெருஞ்ஜோதி அகவலில் சொல்லியிருக்கின்றனர். ஆகலின் இவ்வளவு நெகிழ்ச்சிகளோடு உண்டாகும்படியான அன்பே சிவமென்று அறிஞர்கள்கண்டவண்மை. மேலும் ''ஆருடையவடிக ளருண்மாலே'' 3. பாசுரத்தில்.

''மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்கால
மென்புருவாய்த் தவஞ்செய்வா செல்லாருமேமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் னருளுருவ மடைந்தபின்ன
ரின்புருவு மாயினே நீ யெழில் வாதவூ ரிறையே என்றும்,

காடுங்கையு மனக்குரங்குக் கால் விட்டோட வதன்பிறகே [சா
வோடுந் தொழிலாற் பிணவுளதோ வொன்னய்ப்பலவாயுயிர்க்குயி

பாடுங் கருணைப் பரஞ்ஜோதி யருளைப் பெறுதற் கன்புநிலைத்
தேடும் பருவமிது கண்டீர் சோவாருஞ் செகத்தீரே" எனத்

தாயுமானவரும் அன்பின் நிலையே அருளைப் பெறுதற்கான நிலை யென்றுஞ் சொல்லியுள்ளார்கள். அவ்வன்பானது பதியன்பு பசுவன்பு பாசவன்பு என மூன்று வகைப்படும். அவற்றுள் முதலன்பாகிய பதியன்புதான் சிறந்தது. அம் முதலன்பின் சிறப்புற்றவர் பசுவன்பும் பெற்றவராவார். அப்பசுவன்புடையோர் பதியன்பும் பெற்றவராவார் "சிவஞானசித்தியார்" அரனிடத்தன்பில்லார் அடியாரிடத்து மன்பில்லார். அரனிடத்தன்புள்ளார் அடியாரிடத்து மன்புள்ளார் எனக்கூறியிருக்கின்றார். ஆதலால் சகல ஆன்மாக்களிடத்திலு மொன்றுக நோக்கிப்பார்க்குமன்பே எல்லாம் வல்ல ஆண்டவனிடத்திலும் வைக்கும் அன்பாகும். அவ்வாண்டவனிடத்தில் வைக்கு மன்பே சகலவான்மாக்களிடத்திலும் வைக்கு மன்பாகும் இவ்வன்பின் பெருமையைப்பற்றி ஸ்ரீமத் வள்ளலாரவர்கள் சொற்பொழிவு செய்தகாலத்தில் நான் ஆண்டவனிடத்துஞ் சமயத்தினிடத்தும் வைத்திருந்த அன்பின் பெருமையை நான்கு ஐந்து திருமுறைகளிலும் நீங்கள் பார்க்கலாம். ஆனால் நான் உங்களிடத்தில் வைத்திருக்கும் அன்புதான் என்னை இவ்வளவு மேனிலைக்கு யேற்றி வைத்தது எனக்கூறியிருக்கின்றார். ஒவ்வொரு மனிதர்களுக்கும் மற்றேனைய மக்கள் மாட்டு உள்ளபடியே அன்புடையோராயிருக்குந்தன்மை வந்த அளவிலே அவர்களிடத்திலே யுள்ளசீவத்தன்மைகளாகிய காமம் குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் முதலிய கெட்டகுணங்களெல்லாங் கூடாமலே போய்விடும். அவ்வாறு அன்பிற்கே தன்னுள்ளத்தைக் கொடுத்தவர்களியாரோ அவர்களே திருவருளைப் பெற்றவர்கள். அவர்களே யாவராலும் போற்றுதற்குரியவர்கள். அவர்கள் வாயினுல் சொல்லுவதெல்லாம் வேதவாக்குகளே. அவர்கள் செய்கை முழுவதும் திருவருளின் செய்கையே இதைப்பற்றியே ஸ்ரீமத் வள்ளலார்,

எவ்வுயிரும் பொதுவெனக் கண்டிரங்கியுபகரிக்கின்றீர் யாவ
சந்த, செவ்வியர்தஞ் செயலினைத்துந் திருவருளின் செயலென
வே தெரிந்தேனந்த, கல்வையிலா திருநெறியத் திருவாளர்

தமக்கேகவல் களிப்பாற்செய்ய, ஒவ்வியதென்கருத்தவர் சிலோ திட்வென்வாய்மிகவு மூர்வதாலோ.

எனக்கூறியவண்ணம் நாம் அன்பையே கடவுளின்நெறியாகக்கரு தவேண்டுமென்பதே ஆன்றோர்களெல்லாம் வற்புறுத்தி கூறியி ருக்கின்றார்கள். நாம் நம்மை அன்பிற் காளாக்கிக் கொள்ளவே ண்டுமென்ற வண்மை யறிவைத்தடைசெய்வது சாதி, மதம், சமயம், வருணம் ஆசிரமம் ஆகிய கட்டுப்பாடுகளேயாம். இவை களிற் பற்றிய மனவிருத்தியினால் பொதுத் தன்மையாகிய அன்பை யிழக்கின்றோம். இதைப் பற்றியே சமரச சுத்த சன்மார்க்க சத்திய விண்ணப்பம், 5-வதுபாராவில் "எல்லா முடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே. இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத்தடை யாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம் ஆசிரமமுதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதிற் பற்றாத வண்ணம் அ ருள் செய்தல் வேண்டும்" எனக்கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

தொடரும்)

## சத்தும் சன்மார்க்கமும்

(25-ம் பக்கம் தொடர்ச்சி)

சத்தெனுஞ் செம்பொருள் தோற்றக் கேடுகளின்றி என்றும் ஒரு பெற்றியாயிருப்பது; எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது அதற்கு உடலில்லை; உறுப்பில்லை. அது மாற்ற மனம் கடந்து நிற்பது; சொலற்கரிய சூழலுடையது; எல்லாமாய் அல்லவுமாய் விளங்குவது; எல்லாவற்றையும் இயக்குவது, அஃதின்றி ஓர ணுவும் அசையாது. அத்தகைய ஒன்றன் உண்மையை எங்ங னம்உணர்வது?

கண்ணுக்குப் புலனாகும் இயற்கை வடிவங்களின் வாயிலாகவே அப்பரம் பொருளின் இருப்பைஉணரல் வேண்டும். இயற்கையை ஆராய ஆராயச் சத்தெனுஞ் செம்பொருளின் உண்மை புல னாகும். ஊர்பேர் ஒன்றுமில்லா ஒன்றன் இருப்பை உணர்த் துங் கருவி இயற்கை என்று சுருங்கச்சொல்லலாம். இயற்கை யின் வாயிலாகவே சத்தெனுஞ் செம்பொருள் தன் அகட்

டென்டை நிகழ்த்தி வருகிறது. ஆகவே சத்தை உணர்த்தும் மார்க்கம் இயற்கை. இயற்கையென்பது கருதற்பாலது. சத்தெனுஞ் செம்பொருட்கும் இயற்கைக்கு மூள்ள தொடர்பைஎன் னென்றுகூறுவது? அதை ஒழுக்கால் எழுத முடியுங்கொல்! சத் தெனுஞ் செம்பொருளாகிய இறைவன் எனது அப்பன் என் றும், இயற்கை எனது அன்னை என்றும் யான் கொள்கிறேன்.

இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தல் இறை நெறி நிற்பதாகும். இயற்கை யோடியைந்த வாழ்வு நடத்தாது செ யற்கைச் சேற்றில் வீழ்வது, இறைநெறி நிற்பதாகாது. இய ற்கையோடியைந்து நிற்குமாறு படைக்கப்பட்ட மனிதன் நெ றியல்லா நெறியாகிய செயற்கையில் வீழ்ந்து கிடத்தலால் அவன், தான் பிறந்தநாடு, தான் பேசும் மொழி, தனக்குரிய இனம் முதலிய கட்டுப்பட்ட நிலவற்றைக் கடவுளாக்கொண்டு, மற்ற நாடு மொழியினம் முதலியவற்றோடு பிணங்கி, இடரி ழைத்து வருகிறான். ஒருவன் பிறந்தநாடு மொழி யினம் முதலி யவற்றில் சத்தெனும் செம்பொருளிருப்பது போல மற்ற நாடு மொழி இனம் முதலியவற்றிலும் அப்பொருளிருத்தலை அவன் அறியாமையால், வேற்றுமை யுணர்வால் இடர்ப்படுகிறான். யா ண்டும் அப்பொருளுண்மை யுணர்வனேல், அவன் இடப்படாது இன்பதுகர்வன்.

சத்தெனுஞ் செம்பொருள் என்னும் ஒருபெற்றியாய்த்திரிபு முதலிய மாறுபாடின்றி யிருப்பினும், அதனை யுணர்த்துங் கருவியா யுள்ள யியற்கை பல் வேறு வடிவாகப் பரிணமித்துக் காட்சியளிக்கிறது. பல நாடுகள் பல மொழிகள் பல வழக்க ஒழுக்கங்கள் முதலிய யாவும் இயற்கை அன்னையின் திருவிளை யாடல்கள். பன்னூறு பன் மொழி முதலியன யியற்கை அமை ப்புக்கள். இயற்கையோடியைந்த வாழ்வு செலுத்துவோர்க்கு அப்பன்மை வடிவங்களின் பெருமை புலனாகும்.

இயற்கை அன்னை பன்மை வடிவங்களாக ஏன் காட்சியளிக் கிறாள்? அதனாலன்றோ உலகில் போரும் பிணக்கும் எழுகி ன்றன? என்று சிலர் கூறலாம். அப்பன்மையில்லையேல் உலகம்.

நடைபெறுது. மனிதன் கை கால் உறுப்புக்களின்றித் திண்மையாக ஒரே பிண்டமாகப் பிறப்பனேல் அவனுல் என் செய்ய இயலும்? இங்ஙனே பிறவும். மனிதனது ஒவ்வோர் உறுப்புத் தன் தன் கடனுற்றித் தனக்கும் தன்னையுடைய பூத வுக்கும் இன்பூட்டுவதுபோல அவ்வந்நாட்டவரும் மொழியின ரும் பிறரும் தத்தங் கடனுற்றித் தமக்கும் உலகிற்கும் இன்பூ ட்டல்வேண்டும். இதற்கு ஒருமை யுணர்வு வேண்டற்பாலது என்று மீண்டும் நினவூட்டுகிறேன்.

எவரெவரை இயற்கை எங்கெங்கே பிறப்பிக்கிறதோ அவர வர் ஆங்காங்கே யுள்ள வழக்க ஒழுக்கங்கட்கு இயைந்த வாழ்வு நடாத்துவது இயற்கை அன்னையை வழிபடுவதாகும். ஆங்காங் குள்ள தட்ப வெட்ப நிலைக்கேற்ற வண்ணம் இயற்கை அன்னை மொழி பொருள் முதலியவற்றை வழங்கி யிருக்கிறுள். அவ்வள வில் நிறைகொண்டு வாழ்வது இயற்கை வாழ்வாகும். நிறை கொள்ளாது பேராசையால் மற்ற நாடுகளையும் பொருள்களையும் பற்றி வாழ விரும்புவது செயற்கை வாழ்வாகும். இதனுல் இய ற்கைக்கு மாறுபட்ட வினைகள் நிகழ்கின்றன. அவ்வினைகளால் ஏற்றத்தாழ்வும் அடக்கு முறையும் பிறகொடுமைகளும்உலகிடை நுழைந்து துன்புறுத்துகின்றன. உலகில் இன்ப நுகர்ச்சியில் லா தொழிகிறது. இப்பொழுது உலகம் எங்கேயிலிருக்கிறது? செயற்கை வெம்மையில் வீழ்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. இது நிற்க.

(தொடரும்)

## சுப்பிரமணிய விளக்கம்.

(28-ம் பக்கம் தொடர்ச்சி)

சுப்பிரமணியம் ஒருமுகம் மூன்றுமுகம் நான்குமுகம் ஆறு முகமானதற்கு காரணம் ஒன்று மிரண்டு மல்லாத ஒப்பற்றபரப் பிரம சொரூபம் நம்பொருட்டு குழுக்குறியாய் பாவனைக்கு ஒன் றென்று நிச்சயிக்கும் பரகாரண நிமித்தமாகிய அறிவுருவமே ஒருமுகமென்று ஞானிகள் சொல்லுவார்கள். சுத்த ராஜச சுத்த தாமச சுத்த சாத்வீகமாகிய மூன்று குணங்களின் கூட்டவிளக்க மாகிய முக்குணவிளக்கமே மூன்று முகமென்றும் பசுமனம்சுத்த மனம் உன் மனம் சங்கல்பமனம் என்னும் நான்கு தத்துவக

னின் கூட்ட விளக்கமே நான்கு முகமென்றும் சத்தறிவு மூலம் ஒளியறிவின் மூலம், சுவையறிவின் மூலம், பரிசவறிவின் மூலம் வாசனை யறிவின் மூலம் ஆத்ம அறிவின் மூலம் என்னும் ஆறுதத்துவங் களின் கூட்டறிவின் மூலகாரணப் பிரகாச விளக்கமே ஆறுமுகம். மயில்காலின் கீழும், வாயிலும் பாம்பு இருப்பதென்ன? விசித் திர மாயையின் காரியவுருவமான அகங்காரம் தோன்றி விளங் குங்கால் மூலாங்காரத்திலும் அதிகரிப்பிலும் பிராணவாயுவென் னும் பாம்பானது கீழும் மேலும் உண்டாயினும் அகங்காரத்தின் முகப்பாகிய மயில் வாய் மூலமாய் பிராணவாயுவினது வேகத்தை விழுங்கிக்கொண்டிருப்பது இயற்கைதான். படைவீடென்பதென்ன அடங்கியிருக்குமிடம். அடங்கியிருக்குமிடமாகிய ஸ்தா னங்களில் இயற்கை விளக்கம் தங்குமிடம். இதற்குஊர் ஆறுவா னேன் ஏகமென்பது அழகு பொருந்திய உள்ள மென்னுமிடம் ஒன்று. திருவாவினன்குடி யென்பது திரு-ஆ-இனன்-குடி. திரு இலக்கு மியாகிய சச்சிதானந்தமும் ஆ-பசுவாகியவிளக்கமென்னுஞ் சிவனும் இனன் என்னும் சூரியனுகிய புத்தியும் ஒன்றுகூடிவிளங் கும். ஆன்ம அறிவின் சுத்த காரிய இடம். பழமுதிர் சோலை யென்பது இந்திரிய கரண சீவன்முதலிய அனுபவ பழங்களாகிய பிரயோசன வின்பங்கள் நீங்கிக் குறைவற்ற அறிவாய் விளங்கும் இடம். திருச்சீரலைவாய் திருச்செந்தில் செயந்திபுரம் என்பது சுத்தமனத்தின் முகப்பில் விஷயக்கடலின் அவாவாகிய அலையடி த்துக்கொண்டிருக்கு மிடமாகியகரை. செந்தூக்களினது இருதய ஸ்தானமாகிய மனம் அஞ்ஞான சூரணை நிவர்த்தித்து சச்சிதானந் தத்தைபெற்ற பதி மனத்தின் விளக்கம். திருப்பரங்குன்றமென் பது அசைவில்லாத ஒன்றான விளக்கத்தையுடைய விவேக உல் லாச வின்ப நிறைவு.

குன்று தோராடல் என்பது மலை தோராடல் மலை என் பது அலைவில்லாத உணர்ச்சிக்கு முதற்காரணமாயுள்ள துரிய நன்னிலை. இத்துரியம் சீவதுரியம் சுத்ததுரியம் குருதுரியம் சிவதுரியம் சத்தி துரியம் முதலிய துரியமல்லகள் அனுபவக்காக்ஷி யில் அகந்த மலையுள: மேற்குறித்த அனுபவக் காக்ஷிகளுக்கு தேகத்திலிடம் எவை? கோசத்தின் அடி 1, தொப்புளின்கீழ் 1, தொப்புள் 1, வயிற்றில் தொப்புளுக்குமேல் மார்புக்குகீழ் 1,

மார்பு 1. நெஞ்சு 1. ஆக 6. பிர்மாவைச் சிறையில் வைத்தா ரென்பதாயது? சுத்தமனசங்கல்ப சிருஷ்டித் தொழிலையுடைய பிரமாவாகிய மனத்தை கிரியையில் பிரவேசிக்கவொட்டாமல் சு த்தவிளக்க விவேக நிறைவாயுள்ள சுப்பிரமணியத்துவத்தால் சர்வபிண்ட விஷயங்களாகிய தோன்றல் வளர்தல் குற்றம் நீங் கல் ஒன்றினிடத்தில் மலிவடைதல் தெளிதல் முதலிய பஞ்ச கிருத்தியங்களை விவேக முன்னிலையில் நடத்துங்கால் சலிப்பற பந்தித்திருப்பதே சிறையிட்டது. ஈஸ்வரனுக்கு உபதேசித்த தென்ன? உருத்திரதத்துவமாகிய பிரேரக நிலையான காரணதத் துவ முடிவான ஈஸ்வரதத்துவத்தினியற்கை ஞானம் ஏறிகிரியை குறைந்திருப்பதால் கிரியாகாரண பூதமாயும் ஞானகாரண அம்சமாயும் விளங்கும் பிரணவமாகிய உண்மை நிறைவான கிரியையற்ற நிர்விஷய அனுபவம் ஈசுவரதத்துவத்திற்கு நியதி செய்வது. சுத்த விவேகதத்துவ அதிஷ்டாதாவான சுப்பிரமணி யம் அன்னியில் தோன்றுது,

இது பற்றி உபதேசஞ் செய்தாரெனலாயிற்று. கங்கையிலுள்ள ஞானற் காட்டிற் பிறந்தது என்ன? ஆன்ம இயற்கை குணமாகிய தயவே கங்கை. ஆன்மாவின் அனுபவமத்திய நிலையாகிய சகித்த லென்னும் சர்வவிஷயங்களிலும் அகங்காரமென்னும்தலையெடா மல் கீழ்ப்படிந்த குணமே ஞானல். இரண்டின்தமத்தியில் அனு பவத்திற்கு இயற்கை விளக்கமாய் விளங்கும் பகுத்தறிவாகிய விவேகம். தோன்றுவதே உற்பத்தியானது. பின் கார்த்திகை அரிவைபால் கொடுத்ததென்ன? விவேகவிளக்கந்தோன்றுங்கால் பெண்பாலின் குணமாகிய சமனியென்னும் சத்தியின் விளக்கத் தால் இன்பமாகிய அமுத காரணம் விவேகத்திற்கு ஊட்டுவதே பால் கொடுத்தல் சுவாமி அம்மையிடத்தில் குழந்தையைக்கொ டுக்க அம்மை குழந்தை ஆறையும் ஒன்றுய்சேர்த்து கையால் த டவ முகம் ஆறும் ஒன்றி வேறுயும் உடல் ஒன்றுயும் கால் இரண் டாயும் ஆன தென்ன? பரமாத்மாவாகிய சுவாமி அருளென்னுஞ் சத்தியுடன் தயவென்னும் நதிக்கரையில் சகிப்பென்னும்நாணற் காட்டில் சமாதிமுதலிய காலத்தில் தோன்றி விளங்கும்போது சுத்த வாசனு தோற்றமாகிய அறுபொறியாகியகுழந்தையை அருள்வசமாக்க அருட்சத்தி விகாரமன்னியில் அவிகாரமாய் அறுபொறியையும் அருட்போதக்கையால் அடக்க விஷயங்களை

அறிந்து தேராயாலிருக்க அறுபொறியும் ஒன்றுய்குறி ஆறுயும் அனுபவ விளக்கம் சாதன விளக்க மிசண்டும் திருவடியாயுந் தோன்றி சமாதி நிலே விளங்குவதே.

(தொடரும்)

# தமிழ் ஆயுள் வேதம்.

(27-ம் பக்கத்தொடர்ச்சி)

(சி. ஆறுமுகம் பிள்ளை வைத்தியபதி)

இப்போது இந்துமா கடலுள் முழ்கியிருக்கும் பூபாகமே முதன் முதல் மக்கள் தோன்றிய இடமென (*Be of Hackel* ஹேகெர்முதலிய சரித்திர ஆசிரியர் கூறுகின்றனர். அவ்விடமே தமிழ் முதற்சங்கம் வீற்றிருந்த மதுரை நாடெனப்பல மேற்கோள்கள் வலியுறுத்துகின்றன. அம்முதற்கழகம் இன்றைக்கு 11763 ஆண்டுமுன் தோன்றி நிலவியதெனப்படலால்தமிழ் மொழியும், தமிழ்மக்களும் அத்தகைய சீர்தேற்றமடைவதற்கு அதற்குமுன் பல்லாயிர ஆண்டுகள் சென்றிருக்கவேண்டும்.

மேற்கூறிய தமிழகமாகிய பாண்டிய நாடே உலகிற்பழமையான திருப்பதி யென்று மாணிக்கவாசகசுவாமிகளும் சொல்லியிருக்கிறார். இருக்கு முதலிய வேதங்களுக்கு முற்பட்டிருந்த வைசுவதமனு தமிழன் என்பும் அவர் காலத்தும் அவருக்குமுந்திய காலத்தும் தமிழ் மொழி வழங்கி வந்தது என்பதை வடமொழி நூல்களும் விளக்குகின்றன.

தமிழ் வழங்கும் இப்பகுதியிலுள்ள திராவிடர்களின் நாகரீகமே முந்தியது என்பது நன்றாய் விளங்கக் கிடக்கிறது.

இம்முது நாகரீகர்களாகிய தமிழ் மக்களின் உபயோகத்திலிருந்த வைத்தியமே சித்த ஆயுள்வேதம் என்பதாம்.

இச் சித்த வைத்தியம் தமிழில் சிவசால் எழிலக்கம் பாட்டுகளால் ஆயுள் வேதமென்ற வைத்திய நூல் அருளப்பட்டது. அதைப் பின்பற்றி அம்பிகை, பிள்ளையார், முருகவேள், கந்தி முதலிய சிவகணநாதரும் அவற்றைப் பின்பற்றி சித்தர்களும் ஏறக்குறைய நாற்பதிலக்க நூல்கள் செய்திருப்பதாய்ச் சித்து நூல்கள் கூறுகின்றன. (தொடரும்)

## உத்தரஞான சித்திபுரத்துச் சிற்சபையமைப்பு.

(20-ம் பக்கம் தொடர்ச்சி.)

### அம்ச ஆயாதிகணிதம்.

முன் விஸ்வகர்மீயப்படி சொல்லப்பட்ட ஆயம், வியம் நட்சத்திரம் வாரம் வம்சம் திதி இவை 6-க்கும் முன்போல் பெருக்கி மும்மூன்றுக்கூட்டி கிரமப்படி கழிக்கவும். இராசிக்கும் அம்சத்திற்கும் இரண்டு கூட்டி கழிக்கவும். யோனிக்குப்பெருக்கி 1-கூட்டி கழிக்கவும். வயதுக்கு பெருக்கி 9-கூட்டிக்கழிக்கவும் இரட்டித்த முழத்துக்கு எண் விரலாகவும் ஒற்றித்த முழத்திற்கு 16 விரலாகவும் எண் விரலுக்கு கூட்டின தொகைக்கு இரட்டிப்பாக 16-விரலுக்கு தொகை கூட்டவும் கூட்டி பூரண ஆயாதியின்படி பெருக்கி அத்தொகை கூட்டி கழிக்கவும். இவை அம்ச ஆயாதி என்று பெயராம். இது எண்விரல் 16-விரல் அம்ச ஆயாதியாம்.

### அதம ஆயாதி கணிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆயத்தை | 6-ல் | பெருக்கி | 12-ல் | கழித்த மிச்சம் | ஆயம் எனவும் |
| 8ல் | ,, | 10ல் | ,, | வியம் | ,, |
| 5ல் | ,, | 8ல் | ,, | யோனி | ,, |
| 4ல் | ,, | 27ல் | ,, | நட்சத்திரம் | ,, |
| 5வ | ,, | 7ல் | ,, | வாரம் | ,, |
| 7ல் | ,, | 9ல் | ,, | அம்சம் | ,, |
| 5ல் | ,, | 4ல் | ,, | வமிசம் | ,, |
| 8ல் | ,, | 15ல் | ,, | பட்சம் | ,, |
| 5ல் | ,, | 12ல் | ,, | இராசி | ,, |
| 25ல் | ,, | 100ல் | ,, | வயது | ,, |

இப்படி 10 பொருத்தங்கள் ஆகுமிவை அதமபிரமாண ஆயாதியாம்.

### அதமாதம பிரமாண ஆயாதி கணிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆயத்தை | 10ல் | பெருக்கி | 12ல் | கழித்த மிச்சம் | ஆயம் எனவும் |
| 7ல் | ,, | 10 | ,, | வியம் | ,, |
| 7ல் | ,, | 8 | ,, | யோனி | ,, |

| | | | | |
|---|---|---|---|---|
| 7ல் | ,, | 27 | ,, | நட்சத்திரம் ,, |
| 4ல் | ,, | 7 | ,, | வாரம் ,, |
| 5ல் | ,, | 9 | ,, | அம்சம் ,, |
| 3ல் | ,, | 4 | ,, | ஜாதி ,, |
| 3ல் | ,, | 15 | ,, | திதி ,, |
| 6ல் | ,, | 12 | ,, | இராசி ,, |
| 2ல் | ,, | 100 | ,, | வயது ,, |

இத்தப்படி 10 பொருத்தங்கள் ஆம் இவை அதமாதம பிரமாண ஆயாதியாம்,

## ஆயாதிகளின் பிரயோசனம்.

பூரண ஆயாதிகளிஞலே சகல அளவுகளேயும் கொள்ளவே ண்டும் அம்ச ஆயாதிகளிஞலே கிரகம் மண்டபம் இவைகளு க்கு அளவு கொள்ளவேணடும். அதம ஆயாதி அதமாதம ஆ யாதி இவ்விரண்டினலும் பௌத்தர்களுக்கு கிரகமும் ஆலய மும் கொள்ளவேண்டும். நிதன ஆயாதியினல் குளம் கிணறு இவைகளேப் பார்க்கவேண்டும்.

## நிதன ஆயாதி கணிதம்.

| | | | |
|---|---|---|---|
| 4ல் பெருக்கி | 12ல் கழித்த சேடம் | ஆயம் எனவும், | |
| 7ல் | 10 | — | விரயம் ,, |
| 3ல் | 8 | — | யோனி ,, |
| 6ல் | 27 | — | நட்சத்திரம் ,, |
| 5ல் | 7 | — | வாரம் ,, |
| 9ல் | 15 | — | திதி ,, |

## பூரண ஆயாதியின் பிரயோசனம்.

தேவாலயம் முதலானவையும் கரசாஞதிகளுடன் கூடியது லிங்கம் பீடம் பிரசாதம் முதலான சேஷத்திரம் ஆயுதம் ரதம் வாகனதிகளும் மனுஷ்யாலய முதலானவையும் மனுஷ்ய பிரதிமை முதலானதும் எல்லா அளவுகளுக்கும் பூரண ஆயாதியானது விசேஷம் ஆனதினல் இதப்பூரண ஆயாதிகளேக் கொள்ளவே ண்டும். ஆத்மார்த்தமான லிங்கம், விம்பம் மதில், அறை, லா யம், சிவிகை, கட்டில், தொட்டில், மஞ்சம், தொட்டிக்கட்டு கூ டம், கோட்டை, மண்டபம், வாகனம், கடை, வாவி முதலான

வைகளுக்கு 16 பொருத்தங்களில் பிரதானமானது சுபமான யோனியும், நட்சத்திரமும், யோகமும், சூத்திரமும் ஆகிய இவைகளையே சுபங்களாக கொள்ளவேண்டும்.

ஆறு பொருத்தங்களான நிதன ஆயாதியினுலே தடாகம் கிணறு குளம் இவைகளின் அகவாய்ச்சுற்றினுல் நிச்சயித்துக் கொள்ளவேண்டும்.

ஆயம் கூடுதலாயிருக்கும் மனையினை கொள்ளவேண்டும்.

ஆயம் கூடுதலும் வியம் ஆயத்திற்கு குறையுமானுல் சுபவிருத்தியுண்டாகும். வியம் சமனுகவாவது அதிகமாகவாவதுவந்தால் தனகூயமும் சகல நாசமும் உண்டாகும், ஆதலால் சிற்பாச்சாரி யானவர் ஆயம் கூடுதலாக இருக்கப்பட்ட பொருத்தத்தினையே பார்க்க வேண்டும். தொடரும்)

## வடலூர் சத்திய தருமச்சாலையில் தடந்தேறிய சத்தியஞான சங்கத்தின் அறுபதாமாண்டு நிறைவு விழா கொண்டாட்டம்.

நாளது பிரபவ ஆண்டு வைகாசித் திங்கள் 11ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை. 4மணிமுதல் 5மணிவரையில் ஆண் பெண் கூட்டத்தினர்சுமார் 50 பெயர்கள் கூடித் திருவருட்பிரகாச வள்ளலார் சந்நிதியில் சமாசவேதமாகிய அருட்பெருஞ் ஜோதி, அகவல் பாராயணஞ்செய்தனர். 6 மணி முதல் 10மணி வரையில் திருவருட்பா தோத்திரப்பாக்களை மின்னிசைக்கருவிகளோடுங் கேட்போர் மனங் கனிந்துருகும்படி (அருட்பிரகாசம் பத்திராதிபர்) தில்லை கோ. வரதராஜன் அவர்களும். காஞ்சிபுரம் வேதாசல முதலியார். அவர்களும் முன்னுக வருகைப்பதிகம் பாடிவரவும், பின்னுக அன்பர்களனைவரும் பஜனை செய்துக்கொண்டுவரவும், தருமச்சாலையையும். மும்முறை வலம்வந்தும் திருவருட்பிரகாச வள்ளலாரின் திருவுருவப்படத்தைத்தாங்கிய ஞானசிம்மாதனத்துக்கு மும்முறை ஆராதனைகள் செய்தும், வீதூபிபிரகாசம் சித்திரான்னம் கனிவர்க்கங்களும் ஆண்டகுக்கு நிவேதனஞ்செய்தும் அங்கே குழுமியிருந்த, அன்பர் குழாங்களுக்கு வழங்கப்பட்டன, 10-மணிமுதல் 2-மணிவரையில் அறுசுவையோடு கூடிய அன்னம் நிவேதனஞ் செய்து அன்பர்களும்

அடியார்களும் அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்ஜோதி என்னும் சப்தம் எட்டுதிக்குஞ் செவிடுபடும்படி உரத்தசப்தத்தோடு கூவியும் திருவருட்பாக்களை மிகவுமினிப்பாய்ப் பாடியும் கர்ப்பூர ஆராதனை செய்தும் ஆயிரக்கணக்கான ஏழ்மைகளுக்கு அன்னமளித்துங்களித்தனர். 4-மணிமுதல் மாலை 6-மணிவரையில் திருவாளர் தில்லையாளி கோ, வரதராஜன் அவர்கள் காவேரிப்பாக்கம் திருவாளர். கோவிந்தசாமுதலியார் அவர்கள். கீழ்வேளூர் அருணாசலமுதலியார் அவர்கள் தலைமை (தபால் நிலைய) தலைவர் திருவாளர் நாராயணசாமிபிள்ளை அவர்கள் ஆகிய இவர்களை ஆண்டு விழாவின் நிறைவைப்பற்றியும் "அருட்பிரகாச"பத்திரிகையின் பயனைப்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்த நிரம்பிய அன்பால் சந்தோஷஞ்செய்தும் ஆனந்தித்தனர். 6-மணிமுதல் 9-மணிவரையில் ஸ்ரீமத் வள்ளற் பெருமானின் திருவருட் சந்நிதியில் ஆண்மக்கள் ஒருபக்கமும் பெண்மக்கள் ஒருபக்கமுமாக நின்று பேரன்புடையோராய் அரிய பெரிய தோத்திரங்களைச்செய்து பஜனைபண்ணுவதற்கிடையில் சத்தியஞானசபைக்கு திருக்கூட்டத்தோடு சென்று சபா தரிசனஞ்செய்து மீண்டுந்தருமச்சாலைக்குப்போய்து ஆராதனைப் முடிவுபெறப்புரிந்து ஐயமிர் தம்கண்டுகள் வழங்கிப் பேரானந்தப் பெரும்பேற்றையடைந்துப்தனர். ஆண்டுவிழாவின் நிறைவு பூர்த்தியடைந்தது. நிற்க, மறுதினம் புதவாரத்தன்று திருக்கூட்டத்தின ரனைவரும்மேட்டுக்குப்பஞ்சித்திவளாக மாளிகைக்குச்சென்று ஆண் பெண் இருதிறத்தினர்களுக்கு முறையே சமரசவேத பாராயணங்களும் திருவருட்பாதோத்திரங்களும் சத்தியஞான தியதரிசனமும் கர்ப்பூர ஆராதனைவழிபாடுகளும் பழங்கண்டுமுதலிய விநியோகங்களுடன் அன்பர்களினன்பை அன்பாற் கவர்ந்த சக்கரவர்த்தி அவர்களின் உபசாரங்களும் என்றென்றும் அன்பர்களின் மனதினின்று நிலவுமென்பது உண்மை. அடுத்த குருவாரத்தன்று வடலூர் சத்திய தருமச்சாலைக்கு வந்து சத்தியஞான சிம்மாதன தரிசனமும் ஸ்ரீமத் வள்ளலார் திருவுருவப் படக்காட்சியுங் கண்டுகளித்தனர்.

தாங்கை (தபால் நிலையத்தலைவர்) நாராயணசாமிபிள்ளை அவர்கள் இடைவிடாவன்பால் அன்பர்களுக்கும் வேண்டிய அறிஞர்களுக்கும் தம்மாலியன்ற வுதவியைச்செய்துஞ் சமரசபாட

சாலை கணக்குள் சத்தியதருமச்சாலை கணக்கும் பரிசிலனைசெய்து "அருட்பிரகாசம்" சஞ்சிகையில் வெளிப்படுத்த வேண்டுமென அநுபாபட்டு கணக்குமுடித்து மேலான சிவபுண்ணியங்களுக்கு பாத்திரமாயினுமென்பதைச் சொல்லாமலே யறிஞர்களறியக் கூடும். ஆங்கு நடந்த திவாக கமிட்டியில் நிறைவேறின தீர்மானங்கள் பின்வருமாறு;—

அகஷய ஆண்டு வைகாசி மாதம் 11-ம் நாள்முதல் நிகழும் பிரபவ ஆண்டு வைகாசித்திங்கள் 11-ம் நாள் இறுதியாகிய ஓராண்டிற்குள்ள சத்திய தருமச்சாலையின் வரவுசெலவு கணக்குகளை பரிசோதித்தவண்ணமே அருட்பிரகாசபத்திரிகையில் வெளிவரச் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. 2-வது சரிபார்க்கப்பட்ட சமரச பாடசாலையின் வரவு செலவு கணக்குகளை அருட்பிரகாச சஞ்சிகையில் அன்பர்கள் யாவரும் அறிந்துகொள்ளுமாறு பதிப்பிக்கச்செய்வான் தீர்மானிக்கப்பட்டது. 3-வது அருட்பிரகாச பத்திரிகையின் பெருக்கத்தைக்குறித்து காவேரிப்பாக்கம் திருவாளர் கோவிந்தராசமுதலியாரவர்கள் கிழ்வேளூர் அருணைசல முதலியாரவர்கள் மாயவரம் திருவாளர் அண்ணாமலைபிள்ளை அவர்கள் தரங்கை திருவாளர் நாராயணசாமிபிள்ளை அவர்கள் ஆகிய அபிமானிகளெல்லாம் இந்த அருட்பிரகாச பத்திரிகையானது வடலூர் சங்கத்திற்காக உழைக்கும்கடமை பூண்டொழுகுதலின் பிரயோசனம் [redacted] சங்கத்திற்கே யீடுபடுத்தபோகிறபடியால் இதற்காக சந்தாதாரர்களைச் சேர்த்து மேலுமேலும்விர்த்திமுகங் காட்டவேண்டியயேற்பாடுகளை இன்றுதொடங்கி நாமும் நமதன் பாகளும் செய்ய முன்வரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்நாளைப்போல எல்லாம்வல்ல ஆண்டவன் திருவருளால் எக்காலத்திலுந் தடைபடாது சன்மார்க்க சங்க நீடுழி யோங்கி வாழ்க கடவதாகவென அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் பிரார்த்தனையும் சக்கரவர்த்தி வாழ்த்துப்பாவும் நிறைவேறின.

## சந்தா விவரம்.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன், முதலியஇடங்கு ரூ 2- 0-0
வெளி நாடுகளுக்கு ,, 2-8-0

மாதிரி காப்பி இனம். வேண்டுபவர் கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதக

(வி. பி.) இல்லாத வெளிநாடுகளிலுள்ளோர் முன் பணம் அனுப்புக

தி. கோ. வரதராஜன், வடலூர். கருங்குழி Post.

கூடலூர் ஸௌத்

# உத்தரஞான சித்திபுரம் சத்திய தருமச்சாலையிலே ஸ்தாபித்த திருவருட் பாடசாலைக்கு அக்ஷய நிதித்தில் கையொப்பமிட்டதற்கு வரவு பாக்கி கணக்கு.

அக்ஷயநிதி வைகாசிமீ 11உ

| பெயர். | பொப்பதுகை. | | | வரவு | | |
|---|---|---|---|---|---|---|
| நாகூர் கூ. மு சாமிஞகசெட்டியார் நிதி -க்கு அரிசி மூட்டை 3-க்கு | 36 | 0 | 0 | 36 | 0 | 0 |
| கீழ்வேளூர் அருணாசலமுதலியார் | 3 | | | 3 | | |
| புதுவை சுபாவிர்த்தினிபத்திராதிபர் | 1 | | | 1 | | |
| கும்பகோணம் சரவணமுத்துசெட்டியா | 15 | | | | | |
| ஷிபாத்திரக்கடை சொக்கலிங்கம் பி | 12 | | | 6 | 0 | |
| புதுவை | 5 | | | | | |
| நாகை பரிமணம்பிள்ளை | 5 | | | | | |
| கரட்டு மா. கோ. மாதவச்செட்டியார் | 5 | | | | | |
| ஆவசாணி மாணிக்கவாசகன் | 3 | | | | | |
| குரிஞ்சிபாடி முத்துசின்னதம்புசெட்டி | 3 | | | | | |
| வி. மங்கலம் கேசவசெட்டி | 1 | | | | | |
| ஷி கிருஷ்ணசாமிநாயுடு | 1 | | | | | |
| நீடாமங்கலம் தோல் கு. வீரப்பிள்ளை | 5 | | | | | |
| விரு கோபாலநாயுடு | 1 | | | 1 | 0 | |
| குரி. புதுத்தெருவை சுத்தமுதலி | 1 | | | 5 | 0 | |
| ந. ற சுப்பராயலுசெட்டி | 5 | | | | | |
| வீ. கோவிந்தசெட்டி | 1 | | | | | |
| நீடா. எண். சா. சண்முகம்பிள்ளை | 2 | | | | | |
| பொறையார் கெ. கே. கோவிந்தநாயுடு | 6 | | | | | |
| பொறை சிதம்பரநாடார் | 3 | | | 1 | 0 | |
| வி. நெய் கிருஷ்ணசாமிநாயுடு | 1 | | | | | |
| குரிஞ்சி. பு. சு. வைத்திலிங்கமுதலி | 3 | | | | | |
| ஷி. கெ. எத்துராஜலுநாயுடு | 2 | | | | | |
| திரு. சி. வே. வரதாசெட்டி | 2 | | | | | |
| ஆலபாக்கம் கோபால்நாயுடு | 2 | | | | | |
| பேர. தேவமங்கலம் ஆதிமூலம்பிள்ளை | 1 | | | 1 | 0 | |
| மல்லிகைதேவர் நடராஜஅய்யர் | 1 | | | | | |
| வேலுதயாம்பட்டு வரதப்பநாயுடு | 1 | | | | | |
| சேப்பாநத்தம் விசபத்திரசெட்டியார் | 1 | | | | | |
| வி. என். வைத்திலிங்கபடையாச்சி | 1 | 0 | 0 | | 0 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வி. வேப்ப அண்ணாசாமி | 2 | 0 | 0 | | | |
| சிதம். தெ வீரு பஞ்சாட்சரபிள்ளை | 2 | | | | | |
| பு கோபாலசு மிமுதலி | 2 | | | | | |
| வீராகம் புதுவளவு சிங்காரம்பிள்ளை | 3 | | | | | |
| கெ. பி. தில்லைகோவிந்தபிள்ளை | 2 | | | | | |
| தெற் விருதாங்கம் ஷண்முகம்பிள்ளை | 2 | | | | | |
| வே. ராமலிங்கப்பிள்ளை | 5 | | | | | |
| வேலூர் கர்ணம் அய்யாதுரைபிள்ளை | 1 | | | | | |
| C. V. R பெருமாள் உடையார் | 5 | 0 | 0 | | | |
| ஆக கூ | 153 | 0 | 0 | 54 | 0 | 0 |
| பிரபவஷ வைகாசிமீ 11ஈ | | | | | | |
| கிழ்வேலூர் அ அருணாசலமுதலியார் | 3 | 0 | 0 | | | |
| தாங்கம்பாடி போ. மாஸ்டர் நாராயண | | | | | | |
| சாமிபிள்ளை மீ 1-க்கு 8 அணா ஆக | | | | | | |
| ஷ -க்கு | 6 | | | | | |
| காசைக்கால் நாராயணசாமிபிள்ளை | 3 | | | | | |
| அரித்துவாரமங்கலம்சாந்தானந்தசுவா | 1 | | | | | |
| மாயவரம் வக்கில் சுமாஸ்தா அண்ணாமலைபிள்ளை } [மி | 2 | 0 | 0 | | | |

ஷி. பாடசாலைக்கு கையொப்பக்காரர்களால் பாக்கி வர வேண்டிய தொகை ரூபா 110.

## சந்தா தார்களுக்கு ஓர் அறிக்கை.

மாதந்தோறும் நாம் அனுப்பிவரும் பத்திரிகையை சிலருக்கு நேராகவும் சிலருக்கு கைமாறியும் சிலருக்கு கடபினர் மூலமாகவும் கிடைக்கும் பத்திரிகை கிடைத்தவுடன் சந்தாதார்கள் தமது நேரானவிலாசத்தை எழுதி யனுப்பவேண்டியது அத்துட தமதுன் நண்பர்களையுந் தூண்டி. இப்பத்திரிகைக்கு சந்தாதார்களாகச் செய்விப்பதும் ஓர் பேருபகாரமாகும். பத்திரிகை வேண்டாத அன்பர்கள் நமக்கு வீண்வேலைக்கும் வீண்சிலவுக்கும் இடமில்லாமல் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்துவிட்டால் அதுவே ஓர் நிறந்தகைமாறுகும். பத்திரிகை மாதந்தோறுங் கிடைக்காதிருந்தால் உடனே பத்திராசிரியருக்கு அறிவிக்க வேண்டியது. சந்தாவை முன்பணமாக அனுப்பி பத்திரிகையின் அபிவிருத்தியைக் கோரும்படி நண்பர்களைவேண்டிக்கொள்ளுகின்றோம். தி. கோ. வரதராஜன், பத்திராதிபர்.

வடஆர். கருங்குழி போஸ்டு கூடலூர் தாலுகா.

வேகு அழகும் உறுதியும் வாய்ந்தது

யே து.

# இந்தியா ரப்பர் முத்திரைகள்.

நீடிய காலம் உழைக்கக் கூடிய (செல்ப் இங்
பியாட் பெட்டி உள்பட குறைந்த விலைக்கு கொடுக்கப்
படும். வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்துக்கு எழு
துங்கள்.

No 194 Rs 4—4—0

No 94 Rs 3—12—0

இதில் காணுத எவ்வித ரப்பர் முத்திரைகளும், எல்
லாப் பாஷைகளிலும், தயார்செய்து கொடுக்கப்படும். எல்லா
மாதிரிகளும் தெரிந்து கொள்ள விருப்ப முள்ளவர்கள் க்யாட்
லாக்குக்கு எழுதுங்கள். "அருட்பிரகாசம்" சுத்தா நேயர்க
ளுக்கு மட்டும் பாதி விலைக்கு கொடுக்கப்படும். வேண்டுபவர்
கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதுக.

விலாசம்:-

ஸ்ரீ வாணிவிலாச அச்சியந்திர சாலை.

காரைக்கால் தஞ்சாவூர் ஜில்லா.